**அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்ட கட்டம் 2 - 2023**

-----------------------------------------------------------------------------------------

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்ட கட்டம் 2 இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும்(ஜேஐசீஏ) இடையில் கைசாத்திடப்பட்ட 2016 நவம்பர் 17 ஆந் திகதிய எஸ்எல்-பி 115 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் விஞ்ஞாபனம் மற்றும் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அப்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (என்டபிள்யூஎஸ்டிபீ) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது.

அநுராதபுர மாவட்டத்தில் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் பாதுகாப்பான குடி நீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்து அதன்மூலம் செயற்திட்டம் மூலம் சுகாதார முறைமை மற்றும் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 31,598 மில்லியனிற்கு சமமான ஜப்பான் யென் 27,301 மில்லியனானதுடன் அதில் ரூபா 26,778 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 23,137 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், செயற்திட்டத்தின் மொத்தக் கிரயத்தில் ரூபா 22,464 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 19,409 மில்லியன் ஒதுக்கீடு செயற்திட்ட கட்டம் II நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த அதேநேரம் மிகுதித்தொகை ரூபா 4,315 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 3,728 மில்லியன் செயற்திட்டக் கட்டம் - I இன் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ரூபா 4,820 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 4,164 மில்லியன மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இலங்கை அரசாங்கத்தின் ஏற்பாட்டில் ரூபா 4,733 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 4,089 மில்லியன் செயற்திட்ட கட்டம் II நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த அதேநேரம் மிகுதித்தொகை ரூபா 87 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 75 மில்லியன் செயற்திட்டக் கட்டம் - I இன் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூனில் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீகச் செயன்முன்னேற்றம்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீகச் செயன்முன்னேற்றம்

| இல | செயற்திட்டக் கூறு | நடவடிக்கை | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவப் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றம் மற்றும் பெறுகை<br>சதவீதம் | பெறுகையின் போது அடையப்பட்ட செயன்முன்னேற்றம்<br>சதவீதம் | | | |
| (அ) | நீர் சுத்திகரிப்பு பொறி மற்றும் அதனுடன் தொடர்புடைய வசதிகளின் நிர்மாணம் | உள்வாங்கும் வசதி, நீர் சுத்திகரிப்பு பொறி, நீர் சேகரிப்பு கட்டமைப்புக்கள், இயந்திரவியல், இலத்திரனியல் மற்றும் கட்டிட வேலை போன்றவற்றின் நிர்மாணம். (லொட் ஏ) | 100 | 74 | ஏல ஆவணங்கள் வழங்கப்பட்டு, ஏலத்திற்கு முந்தைய களப் பார்வைகள் மற்றும் ஏலத்திற்கு முந்தைய சந்திப்புகள் ஏப்ரல் 2022 இல் நிறைவடைந்த போதிலும், ஜெய்கா வழங்கல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதால் ஏலத்தின் முடிவு காலவரையின்றி நீட்டிக்கப்பட்டது. | நீர் வழங்கல்<br><br>அமைச்சிடமிருந்தான அறிவுறுத்தலால் விலைமனு சமர்ப்பித்தலிற்கான இறுதித் திகதி தற்போதுள்ள நாட்டு நிலைமையால் மற்றும் ஜெய்கா நிதிகள் மற்றும் ஏற்றுக்கொள்ளல்களை மீளப்பெறும் வரை தொடர்ச்சியாக நீடிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ஆ) | பரிமாற்ற மற்றும் விநியோக குழாய் இணைப்புக்களை வழங்கி மற்றும் நிர்மாணித்தல் | டீஐ, எச்டீபீஈ பரிமாற்றம் மற்றும் எச்டீபீஈ விநியோக மெயின்கள் வழங்கல் மற்றும் இடுதல் (லொட் பீ) மற்றும் எச்டீபீஈ , டீஐ விநியோக மெயின்களை வழங்குதல் மற்றும் இடுதல் மற்றும் பதவிய, கபெத்திகொல்லாவ , கஹட்டகஸ்திகிலிய , ஹொரோவ்பொத்தானை மற்றும் ரபாவ டீஎஸ் பிரிவுகளுக்கான சேவை இணைப்புகளை வழங்குதல். | 100 | 93 | ஜெய்கா வழங்கல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக இந்த கூறுக்கான ஏல நடைமுறை ஏல மதிப்பீட்டு கட்டத்தில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. | என்டபிள்யூஎஸ்டீபீ/எஸ் சீஏபீசீ தீர்மானங்களின் பிரகாரம், விலை மனு செல்லுபடியாகும் காலம் மற்றும் விலைமனு பாதுகாப்புக் காலம் முறையே 01.04.2024 மற்றும் முறையே 28.04.2024 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பரிமாற்ற மற்றும் விநியோக குழாய் இணைப்புக்களை வழங்கி மற்றும் நிர்மாணித்தல் | எச்டீபீஈ, விநியோக குழாய்கள், சேவை இணைப்புகளை வழங்கல் மற்றும் இடுதல்,மற்றும் 250 கொள்ளளவு கொண்ட நீர் கோபுரத்தை நிர்மாணித்தல் (கட்டம் -I க்கான லொட் சீ3) | 100 | 77 | இந்தக் நிர்மாணத்திற்கான விலைமனு 17 நவம்பர் 2021 அன்று அழைக்கப்பட்டு ஜனவரி 26, 2022 அன்று மூடப்பட்டாலும், தற்போது, ஜெய்கா வழங்கல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதால் ஏல மதிப்பீட்டு கட்டத்தில் உள்ளது. | என்டபிள்யூஎஸ்டீபீ/எஸ் சீஏபீசீ தீர்மானங்களின் பிரகாரம், விலை மனு செல்லுபடியாகும் காலம் மற்றும் விலைமனு பாதுகாப்புக் காலம் முறையே 01.04.2024 மற்றும் முறையே 28.04.2024 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | கூறுகளின் வேலைகளை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிர்மாண மேற்பார்வைக்கான ஆலோசனை ஒப்பந்தம். (லொட் எவ்) | நிர்மாண மேற்பார்வைக்கான ஆலோசனை ஒப்பந்தம். (லொட் எவ்) | 100 | 91 | வெற்றிகரமான ஆலோசகருடனான பேச்சுவார்த்தைக் கூட்டங்கள் ஜெய்கா வழங்கல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதால் நடத்தப்படவில்லை. தற்போது, ஒப்பந்தம் ஏல மதிப்பீட்டு கட்டத்திலுள்ளது. | என்டபிள்யூஎஸ்டீபீ/எஸ் சீஏபீசீ தீர்மானங்களின் பிரகாரம், விலை மனு செல்லுபடியாகும் காலம் 01.04.2024 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (உ) | நிலம் கையகப்படுத்துதல் மற்றும் நில அனுமதி | நிலம் கையகப்படுத்துதல் மற்றும் நில அனுமதி | 100 | 76 | மகாவலி அதிகார சபை மற்றும் வனத் திணைக்களத்திற்குச் சொந்தமான ஐந்து காணிகளுக்கான நீண்டகால குத்தகை தொடர்பான நடவடிக்கைகள் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்படவில்லை. | குத்தகை நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் இதனால் செயற்திட்ட நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படாது. | நிலம் கையகப்படுத்தும் பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| பல் மற்றும் எலும்பு புளோரியஸ் போன்றவற்றை விளைவிக்கின்ற மற்றும் நாள்பட்ட கிட்டி நோய்களைப் பரப்புகின்ற அபாயகரமான காரணிகளில் ஒள்றானதுமான பாதுகாப்பற்ற மாசுபட்ட நிலத்தடி நீரில் தங்கியுள்ள மக்களுள்ள கெப்பித்திகொலாவ, பதவியா, கரப்பொத்தான மற்றும் காகரஸ்டிகிலியா பஜரதே செயலகத்தை அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்ட கட்டம் II மேவுகை செய்கின்றது. ஆகையால், பாதுகாப்பான குடிநீர் வசதியினை வழங்குவதற்கு இந்த நீர் வழங்கல் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுத்தது. ஆகையால், அரசாங்கம் பாதுகாப்பான குடிநீரினை வழங்குவதற்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுத்ததுடன் 2017 யூன் இல் ஆரம்பித்து 2024 யூன் இல் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டது. பாதுகாப்பான குடிநீரிற்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற 50,000 குடும்பங்கள் இதற்காக இலக்கிடப்பட்டிருந்த போதும் இந்த் செயற்திட்டத்தின் நிர்மாண ஒப்பந்தம் 78 மாதங்கள் கடந்த பின்னரும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால், அனைத்து நடவடிக்கைகளும் பெறுகைச் செயன்முறைக்கு கீழ் உள்ளதுடன் இந்த நிலைமையால் செயற்திட்டத்தின் நலன்களை இறுதிப் பயன்பாட்டாளர்கள் அடைவது இடரான நிலைமையிலுள்ளது. | ஜெய்கா 2022 ஏப்ரல் இலிருந்து வழங்கல்களை வழங்குவதையும் ஏற்றுக்கொள்ளல்களை வழங்குவதையும் நிறுத்தியிருந்தது. ஆகையால், இந்த ஒப்பந்தத்தினை வழங்குவதில் மேலும் தாமதத்தினை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். | நிதியங்களை கண்டுபிடித்து செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |